படத் தக்க நிலையில் இருக்கின்றன. ஆனால், செயல்படுகிறதா என்று கேட்பதில் அர்த்தம் இரண்டு. ஒன்று, அது ஓடுகின்றதா என்பது. நன்றாக ஓடுகிறது. ஆனால், செயல்படுகின்றதா என்றால், அதாவது அரசு நெல் வாங்கி அரிசி உற்பத்தி நடக்கிறதா என்றால், அவ்வளவு லாபமாக இல்லை.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, நான் கேட்பது மதுரை வடக்கில் ஒரு சாலையில் "நவீன அரிசி ஆலை" என்று ஒரு ஜீப் ஓடுகிறது. அங்கே எந்த விதமான அரிசி உற்பத்தி யாகாமல் இருக்கிறது என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அது குறிப்பாக, செயல்படக்கூடிய நிலையில், ஓடக் கூடிய நிலையில் இருந்தாலும் அது இப்பொழுது நல்ல நிலையில் லாபகரமாக இல்லை.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : 5, 6 ஆலைகள் மட்டும் ஓடு கின்றனவா. ஒப்புக்கு ஓடுகின்றனவா என்று தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கெனவே பதில் சொன்னேன். எல்லா ஆலைகளும் நன்றாக ஓடக் கூடியவை. அதற்கு ஏற்கெனவே அரசு கொள்கை அளவில் அறிவிப்பு கொடுத் திருக்கிறது. 28—1—1972-ம் நாள் சட்டப் பேரவையில் அறிவிப்பு இருக்கின்றது. அதன்படி நவீன அரிசி ஆலைகளை எடுத்து நடத்தும் செயல் குறிப்பு ஒன்று இருக்கிறது, எடுத்து நடத்தினால் நன்றாக நடக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கின்றது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : உணவு அமைச்சர் விளக்கம் தருவாரா ?

*Boarding House for the Students Belonging to Backward Classes in Kattanur.*

* 66. *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM (on behalf of THIRU V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether any representation has been made to the Government for the construction of a Boarding House for the students

belonging to Backward Classes in Kattanur, Tiruchuzhi Sub-Taluk, Ramanathapuram district; and

(b) if so, the action taken thereon by the Government ?

**கட்டநூரில் பிற்பட்ட மாணவர்களுக்கான உணவு விடுதி**

**திரு. பி. திருஞானசம்பந்தம் (திரு. வே. தங்கப்பாண்டியன் சார்பில்) :** மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) இராமநாதபுரம், திருச்சுழி துணைத் தாலூக்காவிலுள்ள கட்டநூரில் பிற்பட்ட மாணவர்களுக்காக உணவு விடுதி அமைக்க வேண்டுமென்று அரசாங்கத்துக்கு வேண்டுகோள் ஏதேனும் வந்ததா?

(இ) ஆம் எனில், அரசாங்கம் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) நிதி வசதிக்குறைவால் இவ்வாண்டு திறக்கப்படவில்லை.

**திரு. எம். ராஜா அய்யர் :** இராமநாதபுரம் மாவட்டத்தில் பிற்பட்ட சமுதாயத்தினருக்காக எந்தெந்த இடங்களில் எந்த மாதிரியான ஹாஸ்டல் திறக்கப்பட இருக்கின்றன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, 3 இடங்களில் திறக்கப்பட இருக்கின்றன. திருத்தங்கல், மண்டலமாணிக்கம், விருதுநகர் ஆகிய இடங்களில் திறக்கப்பட இருக்கின்றன.

*Memento for the Tourists*

* 67 *Q.*—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether there is any proposal to have an emblem for each district for tourists to carry home as a memento; and

(b) if so, the details thereof?